DEPOSITION OF WITNESS

**In the Court of II Additional District and Sessions Judge, Tiruchirappalli.**

**Session Case No:576/2025**
**Present – S.Gopinathan, B.Sc.,B.L.,**
**II Additional District and Sessions Judge, Tiruchirappalli.**
Prosecution witness -3 (LW -7)
(Chapter XXIII Code of Criminal Procedure)

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | **திரு.வினோத்** | Caste | : | |
| Father Name | : | **திரு.ரவி** | Calling | : | **காவல் உதவி ஆய்வாளர்** |
| Village | : | | Religion | : | |
| Taluk | : | | Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day of **19.02.2026.**

**PW -3 (LW -7 )**

(எதிரி ஆஜர் இல்லை. பிரிவு **355** பிஎன்எஸ்எஸ் மனு அனுமதி.) (சாட்சி அவருடைய ஆதார் அட்டை மற்றும் சம்பந்தப்பட்ட போலிசார் மூலம் அடையாளம் காணப்பட்டார்.)

**முதல் விசாரணை:**

நான் தற்போது திருச்சி அமர்வு நீதிமன்ற காவல் நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 19.11.2024-ம் தேதி பொன்மலை காவல் நிலையத்தில் நான் காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்த போது மகாதேவன் என்ற உணவு பாதுகாப்பு அதிகாரி கொடுத்த புகாரை பெற்று நிலைய குற்ற எண்.600/2024-ன் கீழ் BNS 123 r/w 24(1), 6(d) COPTA சட்டத்தின் கீழ் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை **அ.த.சா.ஆ.3** ஆகும். பின்பு மேல் விசாரணைக்காக ஆய்வாளர் வசம் ஒப்படைத்தேன்.

**எ.த.கு.வி :**

| | |
|---|---|
| **கேள்வி** | புகாருடன் இணைத்து வேறு எந்த ஆவணங்களையும் புகார்தாரர் உங்கள் வசம் ஒப்படைக்கவில்லை என்றால்? |

II ADJ COURT, TRICHY

| | |
|---|---|
| **பதில்** | சரிதான். |
| **கேள்வி** | சம்பவ இடத்திற்கு அருகாமையில் எந்த பள்ளிகூடம் உள்ளது, அது எந்த திசையில் உள்ளது என்றோ புகாரில் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால்? |
| **பதில்** | செல்வ மாரியம்மன் கோவில் நகராட்சி அலுவலகம் பள்ளிகூடம் என்று உள்ளது. |
| **கேள்வி** | புகாரில் அவ்வாறு சொல்லியுள்ளது மூன்று வெவ்வேறு இடங்கள் என்றால்? |
| **பதில்** | சரியல்ல. |
| **கேள்வி** | நீங்கள் சொல்வது போல் ஒரு அரசு பள்ளி அந்த பகுதியில் இல்லவே இல்லை என்றால்? |
| **பதில்** | சரியல்ல. |
| **கேள்வி** | சொன்ன தேதியில், சொன்ன விதத்தில் அ.சா.1 புகார் கொடுக்கவில்லை என்றாலும், அதன் அடிப்படையில் நீங்கள் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யவில்லை என்றால்? |
| **பதில்** | சரியல்ல. |

**<u>மறுவிசாரணை</u> :** இல்லை.

திறந்த வெளி நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல நேரடியாக என்னால் தட்டச்சருக்கு கூறப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு பின்பு சாட்சிக்கு படித்து காட்டி அவர் சரியென்று ஒப்புக்கொண்ட பின் இன்று 19.02.2026 என் முன்பு கையெழுத்து செய்தார்.

Sd/.Thiru.S.Gopinathan,

இரண்டாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,

திருச்சிராப்பள்ளி.

தேதி: 19.02.2026

II ADJ COURT, TRICHY